# DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
UDUMALPET

SESSIONS CASE No: 126/2016

Deposition of Witness for : P.W.11

| | | | |
|---|---|---|---|
| Name | : வீரக்குமார் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 17.03.2023

**All Accused present.**

**முதல் விசாரணை தொடர்ச்சி –**

**(எதிரி ஆஜர். இன்றைய தினம் LW 13 அரசு தரப்பு சாட்சி 11 ஆக விசாரிக்கப்பட்டார்)**

சத்தியமாக சொல்கிறேன். நான் ஏற்கனவே 24.2.2023 அன்று சாட்சியம் அளித்துள்ளேன். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனம் டிஎன் 41 பி 6145 என்ற வாகனத்தை என்னால் அடையாளம் காட்டமுடியும். 1ம் எதிரியை தூங்காவி நால்ரோடில் கைது செய்தபோது நானும் சாட்சி உதயகுமாரும் இருந்தோம். நாங்கள் கணியூர் செல்ல இருசக்கர வாகனத்தில் போனபோது போலீசார் எங்களை குறுக்காட்டி ஓட்டுனர் உரிமம் கேட்டார்கள். நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது டிஎன் 41 பி 6145 என்ற வண்டி நிற்காமல் சென்று சற்று தள்ளி நின்றது. அதில் இருவர் வந்தார்கள். வண்டியை போட்டு விட்டு ஓட ஆரம்பித்தார்கள். போலீசார் 4 பேர் இருந்தார்கள். மடக்கி பிடித்தார்கள். ஆஜர் எதிரிகள்

1 மற்றும் 2 ஐ தான் அன்றைய தினம் பிடித்தார்கள். 1 ம் எதிரி போலீசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார். போலீசாரிடம் தாங்கள் மகேஸ்வரியுடன் சேர்ந்து பாலாஜி என்பவரை கொலை செய்ததாக ஒப்புதல் வழங்கினார். அதை போலீசார் எழுதினார்கள். என்னிடம காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து அசாஆ.4. எங்களை தூங்காவி நால்ரோடில் இருந்து கொஞ்சம்கிழபுறமாக சென்று முதல்மடை திறக்கும் இடத்திற்கு அழைத்து சென்று சுற்றி காட்டினார். ரத்தம்படிந்த மண் படியாதமண் எடுத்தார்கள். அதன் பிறகு வடக்கு பார்த்தவீட்டின் முன்னால் இருந்த பாத்ரூமில்இருந்து மூக்காண்கயிறு மற்றும அருவாளை எடுத்துக் கொடுத்தார்.பிறகு நல்லாம்பள்ளி வந்தோம். சந்திரசேகரின் வீட்டிற்கு அருகில் இருந்து பேக், டிபன்பாக்ஸ், இரண்டு சட்டைகளும் எடுத்து ஆஜர் செய்தார். அதை மகஜரில் கைப்பற்றினார்கள். கையெழுத்து செய்தேன். பிறகு தாராபுரம் வந்தோம். மடிக்கணிணியில் பதிவு செய்தார்கள். பிரிண்ட் எடுத்ததில் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் வண்ண புகைப்படத்தில் உள்ள வாகனம் தான் அது. அந்த வாகனம் சாபொ.1. நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தப்பட்டு இருப்பது தான். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றும் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றும் மகஜர் அசாஆ.5. என்னிடம் காட்டப்படும் மற்றொரு கைப்பற்றும் மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் கருப்பு கலர் பேக் ஒன்று லிபர்ட்டி என்ற பையும், டிபன்பாக்ஸ் மூடியுடன் ஒன்றும், நீலநிறமுழுக்கை சட்டை , அரைக்கை சட்டை ஒன்று என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. கருப்பு கலர் பேக் லிபர்ட்டி என்ற பை சாபொ.2, டிபன்பாக்ஸ் மூடியுடன் ஒன்று சாபொ.3, நீலநிறமுழுக்கை

சட்டை சாபொ.4. அரைக்கை சட்டை சாபொ.5. மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அசாஆ.6. என்னிடம் காட்டப்படும் மற்றொரு கைப்பற்றும் மகஜரில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அதில் மரக்கைப்பிடியுடன் கூடிய அருவாள், இரண்டு முனைகளிலும் முடிச்சு போடப்பட்ட வெள்ளை நிறகயிறு கைப்பற்றினார்கள். அந்த அருவாள் சாபொ.6. இரண்டு முனைகளிலும் முடிச்சு போடப்பட்ட வெள்ளை நிறகயிறு சாபொ.7. மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அசாஆ.7. என்னிடம் காட்டப்படும் மற்றொரு கைப்பற்றும் மகஜரில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். ரத்தம் படிந்த மண் சிறிது, ரத்தம் படியாத மண் சிறிது எடுத்தார்கள். அது சாபொ.8 , 9. மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அசாஆ.8. **1ம் எதிரி தன்னை அழைத்து சென்றால் " அருவாள், மூக்கணான்கயிறு , இறந்தவரின் ரத்தக்கறைபடிந்த சட்டை டிபன்பாக்ஸ், பேக், ரத்தக்கறைபடிந்த சட்டையை எடுத்து ஆஜர் செய்வதாக" சொன்னார். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.9.**

போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை 1ம் எதிரி தரப்பில்</u>

நான் பிட்டராக வேலை செய்கிறேன். உதயகுமார் ஜேசிபி வைத்துள்ளார். என் அம்மா பெயர் பாக்கியம். பாக்கியத்தின் அண்ணன் பஞ்சலிங்கம் என்றால் ஆமாம். பஞ்சலிங்கத்தின் மகன் தான் இறந்து போன பாலசுப்ரமணியம். அவர் எனக்கு தாய்மாமா மகன் என்றால் சரிதான். உதயகுமார் ஒரு வகையில் என் உறவினர் என்றால் ஆமாம். உடுமலைபேட்டையிலிருந்து மைவாடி வழியாக கணியூர் போகவேண்டும் என்றால் சரிதான். தூங்காவி சென்று போனால் அது சுற்று வழி என்றால் தெரியாது. ஜேசிபி வேலை செய்வதற்காக இடத்தை போய் பார்த்தேன்,

அதனால் அப்படி போனேன். எங்கள் ஊரில் 5.45 மணிக்கு புறப்பட்டோம். உதயகுமாரின் 220 பல்சர் பைக்கில் புறப்பட்டோம். அதன் பதிவெண் தெரியாது. வண்டி வளத்தியாக இருக்கும். அவர் அப்போது தான் புதிதாக அந்த வண்டியை எடுத்திருந்தார். யாருடைய நிலத்தை பார்க்கபோனோம் என்றால் சேரன்நகரில் ஒருவரின் நிலத்தை பார்க்கபோனோம். உதயகுமார் என்னிடம் சொன்னாரா என்றால் ஆமாம். என் வேலையாக அங்கு போகவில்லை என்றால் சரிதான். எனது மாமா மகன் பாலசுப்ரமணியம் எப்போது இறந்தார் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எங்கு அடக்கம் செய்தார்கள் என்று தெரியாது. நான் போகவில்லை. நால்ரோடு எங்கெங்கு போகிறது எந்த ஊர்களுக்கு செல்கிறது என்று சொல்லமுடியுமா என்றால் முடியாது. தூரத்தில் போகும்போது அந்த நால்ரோட்டில் நிற்கும் நபர்கள் தெரியும் என்றால் சரியல்ல. நாங்கள் நால்ரோடு போகும்போது மணி என்ன என்றால் காலை 6.45 மணி இருக்கும். உதயகுமார் என்பவர் வண்டியை ஓட்டி வந்தார். அவரிடம் லைசென்ஸ் கேட்டார்கள். எத்தனை போலீசார் இருந்தார்கள் என்றால் 4 பேர் இருந்தார்கள்.சீருடை அணிந்தவர் 2 பேரும், சாதாரண உடையில் 2 பேரும் இருந்தார்கள். விசாரிக்கும்போது தான் அவர்கள் போலீசார் என்று தெரிந்து கொண்டேன். நாங்கள் போகும்போது வேறு வாகனங்களை நிறுத்தி சோதனை செய்தார்களா என்றால் ஒரு லாரியை சோதனை செய்தார்கள். அந்த லாரி மேற்கிருந்து கிழக்கு நோக்கி போனது. சோதனை செய்த அதிகாரியின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. எந்த காவல்நிலையம் என்றால் அலங்கியம் காவல்நிலையம். போலீசார் வாகன சோதனையின் போது தாங்கள் எந்த காவல்நிலையத்தை சார்ந்தவர்கள் என்று சொன்னார்களா என்றால் இல்லை. நாங்கள் இருந்த இடம் கணியூர்

காவல்நிலையத்திற்கு உட்பட்டது என்றால் தெரியாது. சம்பவ இடத்திலிருந்து அலங்கியம் சுமார் 40 கிமீ இருக்கும் என்றால் சரிதான். 1,2 எதிரிகள் என்ன நிற சட்டை அணிந்திருந்தார்கள் என்றால் நினைவில்லை. நாங்கள் சென்ற 5 வது நிமிடத்தில் எதிரிகள் பைக்கில் வந்தார்கள். எங்களை தவிர பொதுமக்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். எதிரிகள் சொல்ல சொல்ல போலீசார் எதில் எழுதினார்கள் என்றால் பேப்பரில் பேனாவால் எழுதினார்கள். யார் எழுதினார்கள் என்று தெரியாது. அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் தாங்கள் சேர்ந்து கொலை செய்ததாக சொன்னார். முதல் எதிரி தான் சந்திரசேகர் சொன்னார். இருசக்கர வாகனத்தின் சீட் மீது வைத்து வெள்ளை பேப்பரில் லெட்டர்பேடு போல் இருந்தது அதில் எழுதினார்கள். போலீஸ் அதிகாரிகள் பைக்கில் வந்தார்களா என்றால் ஆமாம். அதில் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் ஆமாம். என்னிடமும் உதயகுமாரிடமும் வாங்கினார்கள். என்ன எழுதப்பட்டிருந்தது என்று படித்து காட்டினார்களா என்றால் இல்லை சொல்ல சொல்ல கேட்டு கொண்டிருந்ததால் படிக்கவில்லை. எத்தனை பக்கம் எழுதியிருந்தார்கள் என்றால் 1 பக்கம் எழுதியிருந்தார்கள். ப்ளூ கலர்பேனாவால் எழுதினார்கள். கையால் எழுதியதாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படவில்லை என்றால் ஆமாம். எங்களை அழைத்து கொண்டு சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டியது என்றால் 1,2 எதிரிகள் காட்டினார்கள். சீருடையில் இருந்த போலீசார் வந்தார்கள். அந்த இடத்தில் இருந்து ரத்தம் படிந்த மண், ரத்தம் படியாத மண் கைப்பற்றினார்கள். அந்த கிளை வாய்க்கால் கான்கீரிட் கிடையாது. மண் வாய்க்கால். கிளை வாய்க்கால் கரைக்கு பக்கத்தில் உள்ள விவசாய பூமி

காட்டினார்கள். கிளை வாய்க்கால் கிழக்கிருந்து வந்து மீண்டும் தெற்கு திசையில் லேசாக வளைந்து செல்கிறது. கிளை வாய்க்கால் பிரியும் இடத்தில் மண் எடுத்தார்கள். போலீசார் அந்த இடத்திலேயே எழுதினார்கள். அதில் நானும் உதயகுமாரும் கையெழுத்து செய்தோம். மண் எடுத்த இடத்தில் எங்கள் 6 பேரை தவிர வேறு யாரும் இல்லையா என்றால் இல்லை. மகஜரில் கையெழுத்து செய்துவிட்டு சிறிது தூரம் சென்று பக்கத்து ஊருக்கு போனோம். போலீசார் இருவரும் ஒவ்வொரு வண்டியில் ஒவ்வொரு எதிரியையும் நாங்கள் ஒரு வண்டியிலும் போனோம். போலீசார் வண்டி காவல் துறை வண்டியா என்று தெரியாது. பக்கத்தில் உள்ள ஊரில் உள்ள இடத்தை யார் காட்டினார்கள் என்றால் எதிரிகள் தான் காட்டினார்கள். பக்கத்து கிராமத்திற்கு எவ்வளவு நேரத்தில் போனோம் மொத்த நிகழ்வுகளும் எவ்வளவு நேரத்தில் நடந்தது என்றால் காலை 6.30 மணி முதல் 12.30 வரை நடந்தது. மூக்காணன்கயிறு, அருவாளை யார் எடுத்து கொடுத்தார்கள் என்றால் 2 எதிரிகளில் யார் என்று தெரியவில்லை. நான் அங்கு பார்த்தது கொடுவாள் தான். அருவாள் என்றால் தவறு. ஊரில் பஸ் ஸ்டாப் அருகில் அந்த வீடு இருந்தது. அங்கு காவல்துறையினர் எவ்வளவு நேரம் இருந்தார்கள் என்றால் 10-20 நிமிடம் இருந்தார்கள். மறுபடியும எழுதினார்கள் கையெழுத்து போட்டோம். வெறும் பேப்பரில் எழுதினார்கள். ரத்தம்கைப்பற்றபட்ட இடத்திலும் வெறும் தாளில் எழுதினார்களா என்றால் ஆமாம். அதில் தான் கையெழுத்து செய்தோம். . என்ன எழுதினார்கள் என்று கேட்டால் தெரியாது. நல்லாம்பள்ளிக்கு அதன்பிறகு ஜீப்பில் போனோம். போலீஸ் ஜீப் வந்தது. தூங்காவியில் இருந்து வந்தது. அதை யார் ஓட்டி வந்தார்கள் என்றால் ஒரு போலீசார் ஓட்டி வந்தார். எங்களுடன் வந்த 4 பேரில் அவர் இல்லை. காவல்துறை

ஜீப்பில் நாங்கள் 9-10 பேர் சென்றிருக்கலாம். யார் போலீசாருக்கு வழி சொன்னார்கள் என்றால் தெரியாது. அங்கு ஒரு வீடு இருந்தது. பக்கத்தில் முள்காடு இருந்தது. யார் எடுத்து வந்தார்கள் என்றால் போலீசாரும் எதிரிகளும் போனார்கள். யார்எடுத்து கொடுத்தது என்று தெரியாது. போலீசார் எடுத்து வந்த சட்டையை யாருடைய சட்டை என்றும் என்ன அடையாளம் உள்ளது என்று என்னிடம் சொன்னார்களா என்றால் இல்லை. அப்போது அந்த ஊரைசேர்ந்த நபர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். சற்று தள்ளி இருந்தார்கள். அப்போது நேரம் 3.30-4 மணியிருக்கும். சட்டையில் கிழிசல் அல்லது வேறு கறைகள் இருந்ததா என்றால் தெரியாது. டிபன் பாக்ஸ், கருப்பு பேக் யாருடையது என்றால் தெரியாது. இதே போல் மகஜர் எழுதினார்கள். வெள்ளை பேப்பரில் எழுதினார்கள். என்ன எழுதப்பட்டியிருந்தது என்று தெரியாது. போலீசார் படித்து காட்டினார்களா என்றால் இல்லை. ஆனால் சொல்ல சொல்ல கேட்டேன். அங்கிருந்து புறப்படும்போது மணி 4 இருக்கும். உடுமலைபேட்டை பொள்ளாச்சிரோடு வழியாக சென்றோம். நல்லாம்பள்ளியிலிருந்து அலங்கியம் காவல்நிலையம் போனோம். அங்கு சுமார் 1-1.30 மணி நேரம் இருந்தோம். அப்போது காவல்நிலையத்திற்கு என் மாமா, உறவினர்கள் வந்தார்களா என்றால் இல்லை. போலீசார் காவல்நிலையம் சென்று எதிரிகளிடம் விசாரித்தார்களா என்றால் ஆமாம். இதுபோல் மடிக்கணிணியில் டைப் அடித்தார்கள். அது ஒப்புதல் வாக்குமூலமா என்றால் ஆமாம். அதில் நானும் உதயகுமாரும் கையெழுத்து செய்தோமா என்றால் ஆமாம். இரண்டு பேரும் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். 7.2.2015 என்றால் சரிதான். ஆனால் நாள் கிழமை தெரியாது. மொத்தம் 5,6 கையெழுத்து

போட்டோம். பாலசுப்ரமணியம் என் மாமா மகனுக்கு குடிபழக்கம் உள்ளது என்றால் தெரியாது. அமராவதி பிரதான வாய்க்காலில் சுமார் 70 கிமீ நீளமுள்ள வாய்க்காலில் அவ்வப்போது தற்கொலை அல்லது வேறு வகையில்இறந்து பிரேதம் மிதப்பது வழக்கம். நாங்கள் சென்றபோது தண்ணீர் வாய்க்கால் முழுவதும் போனதா என்றால் அரை வாய்க்காலுக்கு தான் தண்ணீர் போனது. பிரேதம் எங்கு எடுக்கப்பட்டது என்றால் தெரியாது. எங்கள் இருசக்கர வாகனத்தை எப்போது காவல்நிலையத்தில் இருந்து எடுத்து சென்றோம் என்றால் பேருந்து மூலம் வந்து இரவு 7 மணிக்கு எடுத்து சென்றோம். 25 கிமீ தள்ளி நானும் உதயகுமாரும் அங்கு போக வேண்டிய அவசியம் இல்லை என்றும், எதிரிகள் வந்ததாக சொல்வதும், ஒப்புதல் கொடுத்ததாக சொல்வதும், பொருட்களை கைப்பற்றியதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. வாகன தணிக்கையில் போலீசார் ஈடுபட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மாமாவிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எங்களுக்கும் அவர்களுக்கும் தொடர்பு இல்லை.

குறுக்கு விசாரணை 2, 3 ம் எதிரிகள் தரப்பில்

இல்லை.

S.Nagarajan
Additional District and Sessions Judge,
Udumalpet (FAC)

SC.No 126/16

PW 11 வீரக்குமார்

**1ம் எதிரி தன்னை அழைத்து சென்றால் " அருவாள், மூக்கணான்கயிறு , இறந்தவரின் ரத்தக்கறைபடிந்த சட்டை டிபன்பாக்ஸ், பேக், ரத்தக்கறைபடிந்த சட்டையை எடுத்து ஆஜர் செய்வதாக" சொன்னார். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.9.**

S.Nagarajan
Additional District and Sessions Judge,
Udumalpet (FAC)